

# புனித லூர்து மாதா தேவாலயம்




45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

**மறைத்திரு திருத்தொண்டர் சந்தனசாமி பீட்டர்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org


**திருத்தந்தையின் கருத்து : சமூக கட்டமைப்புகள்: சமூக கட்டமைப்புகள் பிறரின் வேறுபாடுகளுக்காக அவர்களை மதிக்கும் உள்ளடக்கிய தன்மையை நோக்கி செயல்பட வேண்டுமென்று**

**ஜூன் மாத கரு : எடுத்து, பிட்டு கிறிஸ்துவில் கொடுங்கள்**

**பங்கில் திருப்பலிகள்**

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| ஜூன் 24 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | திருமுழுக்கு யோவானின் பிறப்பு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ) | திருமுழுக்கு யோவானின் பிறப்பு |
| | காலை 11.00 | திருப்பலி (ம) | திருமுழுக்கு யோவானின் பிறப்பு |
| | மாலை 5.30 | நவநாள்/ திருப்பலி (த) | கிறிஸ்து அரசர் சிற்றாலயம், புந்தோங் தீகா |
| ஜூன் 25 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| ஜூன் 26 செவ் | காலை 9.30 | திருப்பலி (ஆ, த) | மூத்தோர் பணிக்குழு திருப்பலி @ பெர். மை |
| | மாலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| ஜூன் 28 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | புனித இரனேயு |
| ஜூன் 29 வெள் | மாலை 6.30 | திருப்பலி (த) | புனிதர்கள் பேதுரு & பவுல் |
| ஜூன் 30 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | உரோமை திருச்சபையின் முதல் மறைசாட்சியர் |
| | காலை 11.00 | திருமணம் (த) | எல்விஸ் ராஜ் சந்தனசாமி & ஷர்லின் ஜெகதீஸ்வரி பொன்னையா |
| ஜூலை 1 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | பொதுக்காலம் 13ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | பொதுக்காலம் 13ஆம் ஞாயிறு |
| | மாலை 6.00 | திருப்பலி (த) | புனித செபஸ்தியார் சிற்றாலயம், முனிசிபல் |

**பங்கு நடவடிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| ஜூன் 24 ஞா | மாலை 7.30 | புந்தோங் தீகா | கிறிஸ்து அரசர் சிற்றாலய குழு கூட்டம்- மேற்கு திசை தலைவர்கள் |
| ஜூன் 26 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை குழு |
| | மாலை 8.00 | பெர். மை 1-1 | பெற்றோர் ஆதரவு குழு |
| | மாலை 8.00 | பெர். மை 2-3 | திருப்பலி மேற்பார்வையாளர் குழு |
| | மாலை 8.00 | முனிசிபல் | அருங்கொடை (த) |
| ஜூன் 27 புதன் | மாலை 8.00 | பெர். மை 1-1 | அருங்கொடை (த) |
| ஜூன் 28 வியா | மாலை 7.00 | ஆலயம் | முன்னோன் & வாசகர் பயிற்சி |
| | மாலை 8.00 | பெர். மை 1-3 | எழுப்புதல் குணமளிப்பு செபமாலை |
| ஜூன் 29 வெள் | மாலை 7.30 | பெர். மை 1-1 | பங்கு நிதி குழு |
| | மாலை 8.00 | புந்தோங் தீகா | இரக்கமிகு ஆண்டவர் செபம் |
| ஜூன் 30 சனி | காலை 9.00 | பெர். மையம் | ஒருங்கிணைந்த இறையியல் கல்வி சான்றிதழ் 2 |
| | மாலை 5.30 | ஆலயம் | செபமாலை/ சகாய மாதா நவநாள் |
| ஜூலை 1 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) |
| | மதியம் 12.00 | ஆலயம் | புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு (த) |

17 & 24 ஜூன் 2018 மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது. மீண்டும் 1 ஜூலை 2018 வகுப்புகள் வழக்கம் போல் நடைபெறும்.

<u>2018 ஜூலை மாத திருமணங்கள்</u>

ஜூலை 7 மாலை 4.00 திருமணம் (த) ஜேசன் த/பெ தேவதாஸ் & மெல்வினா லூர்ட்ஸ் மேரி

ஜூலை 7 மாலை 4.00 திருமணம் (த) ஜேமன் @ ஜோசுவா தேவதாஸ் & எபிகேல் நர்மதா த/பெ பாலகிருஷ்ணன்

ஜூலை 14 காலை 11.00 சடங்கு (ஆ) வேளாங்கண்ணி பீட்டர் ஆரோக்கியநாதன் & ரீனா ராணி தோமஸ் ராஜரத்தினம்

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. ஒருங்கிணைந்த இறையியல் கல்வி சான்றிதழ் 2:** நாங்கள் அடுத்த பாடத்தொகுதியான "நன்னெறி இறையியல் அறிமுகம்" 7/7/18 தொடங்க இருக்கிறோம். விரிவுரைகள் மாதத்தில் இரு சனிக்கிழமைகளில் நடைபெறும். (காலை 9.00 ~ மதியம் 1.00 வரை) **இடம்**: புலூமாதே, ஈப்போ. **கட்டணம்**: ரிம 100/- @ ஒரு பாடம். **தொடர்புக்கு:** 04-2611350 (திங்~வெள் அலுவலக நேரம்)

**2. மூத்தோர் பணிக்குழு:** அடுத்த ஒன்றுகூடுதல் 26 ஜூன் 2018 (செவ்) காலை 9.30க்கு பெர். மையத்தில் திருப்பலியுடன் தொடங்கும். 60 வயதுக்கு மேற்பட்ட பங்கு மக்கள் கலந்துக்கொள்ள வரவேற்கப்படுகிறீர்கள்.

**3. அவே சிற்றாலய நிலவரம்:** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட திட்டத்தையொட்டி, நாங்கள் பின்வரும் நான்கு வழிமுறைகளை மேற்கொண்டுள்ளோம்: அ) கட்டிட திட்டம் பற்றி அவே சிற்றாலய செயல்குழுவினரிடம் கலந்தாலோசித்தோம். ஆ) கட்டிட திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் கலந்துரையாடவும்/ கருத்து அறியவும் எல்லா அதிச தலைவர்களும் அழைக்கப்பட்டனர். இ) சில தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டன. ஈ) நியமிக்கப்பட்ட கட்டிட வடிவமைப்பாளரிடம் நாங்கள் திட்டப்படத்தை சமர்ப்பித்துவிட்டோம். தற்போது தகுந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து ஈப்போ நகராண்மைக் கழக ஒப்புதலைப்பெறுவது கட்டட வடிவமைப்பாளரின் பொறுப்பாகும்.

**4. அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (தமிழ்)** 14 ஜூலை 2018 (சனி) @ மாலை 4.30க்கு நடைபெறும். மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**5. புனித பிரான்சிஸ் அசிசி சிற்றாலயம்:** தாசேக், புனித பிரான்சிஸ் அசிசி சிற்றாலயம் புதிதாக பாடல் குழுவை உருவாக்கப்பட இருப்பதால் கிழக்கு திசையில் உள்ள உறுப்பினர்கள் கலந்துக்கொள்ள வரவேற்கப்படுகிறீர்கள். தொடர்புக்கு: கிறிஸ்டினா (012-5983588)/ மரியா (016-5650855)

**6. புனித செபஸ்தியார் சிற்றாலயம்:** முனிசிபல், புனித செபஸ்தியார் சிற்றாலயம் புதிதாக பாடல் குழுவை உருவாக்கப்பட இருப்பதால் தெற்கு திசையில் உள்ள அதிச உறுப்பினர்கள் கலந்துக்கொள்ள வரவேற்கப்படுகிறீர்கள். தொடர்புக்கு: சின்னப்பன் (012-5052685)/ திருத்தொண்டர் சந்தனசாமி (016-5459880)

**7. மலேசிய நம்பிக்கை நிதிக்காக வசூல்:** நமது நாட்டின் பொருளாதார நிலையையும் தேங்கி நிற்கும் நாட்டு கடனையும் கருத்தில் கொண்டு, மலேசிய அரசாங்கம் இந்த சவால்மிக்க சூழ்நிலையைக் கையாள பொருளாதார உதவியை நாடுகிறது. நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக, பினாங்கு மறைமாவட்டம், எதிர்வரும் 24 ஜூன் 2018 வாரயிறுதி திருப்பலிகளில் (வெள்ளி, சனி, ஞாயிறு) இந்த கூட்டு முயற்சியை மேற்கொள்ளும். இந்த வாரயிறுதியின் எல்லா திருப்பலிகளின்போது ஒரே ஒரு அன்பு காணிக்கை மட்டுமே வசூலிக்கப்பட்டு மலேசிய நம்பிக்கை நிதிக்கு வழங்கப்படும். **- ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ்**

**8. 2018/ 2019 முதியோர் திருமுழுக்கு- புதிய ஆள் சேர்ப்பு (யோவான் 1:39) "வந்து பாருங்கள்":** புதிய வகுப்புகள் 5/7/18 (வியா) தொடங்கும். யாருக்கு முதியோர் திருமுழுக்கு? திருமுழுக்கு பெறாத பெரியவர்கள், மற்ற கத்தோலிக்க அல்லாத கிறிஸ்துவ பாரம்பரியத்தில் திருமுழுக்கு பெற்ற பெரியவர்கள். புது நன்மை, உறுதிபூசுதல் அருள்சாதனங்களைப் பெறாத கத்தோலிக்க பெரியவர்கள். அதிச & பணிக்குழு தலைவர்கள் இந்த தகவலை பரப்புங்கள். உங்கள் பெயர்களை பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யலாம். **இறுதி நாள்**: 25/06/2018. மேல் விபரங்களுக்கு பங்கு குருவானவர்கள்: தந். ரோபர்ட் டேனியல்/ தந். சைமன் ஆனந்த் (பங்கு அலுவலகம் 05-5279349)/ திரு.ஜேரோம் சாமுவேல்: 05-5268329/ 012-6786911)

**9. ஆவிக்குள் அருள்வாழ்வு கருத்தரங்கு ஆங்கிலத்தில்: நாள்**: 6 ஜூலை (மாலை 8.00க்கு) - 8 ஜூலை 2018 (1.00க்கு) **இடம்**: பெர். மையம் **பேச்சாளர்**: மறைத்தந்தை பீட்டர் அந்தோணி **கட்டணம்:** ரிம 15/- **தொடர்புக்கு**: பெட்ரிக் (016-5556394)/ கிறிஸ்டினா (019-5757913). பதிவுகள் பங்கு அலுவலகத்திலும் தொலைபேசி வழியாகவும் பதிவு செய்யலாம். 70 நபர்களுக்கான இடங்கள் மட்டுமே உள்ளன. **இறுதி நாள்**: 1 ஜூலை 2018

**10. கண்கவரும் இரவு 2018: கருத்து:** புலூமா திருமணமான தம்பதிகளுக்கு கண்கவரும் இரவு 2018 **இடம்**: Heritage Hotel (4* விடுதி) - Cameron Highland. **பதிவு:** 11/8/18 (சனி) **வெளியேறும் நேரம்**: 12/8/18 (ஞாயிறு) **கட்டணம்:** ரிம 350/- ஒரு தம்பதிக்கு (போக்குவரத்து, 4* விடுதி & 4 உணவு உள்பட) **சிறப்பம்சங்கள்**: திருமண வாக்குறுதியை புதுப்பித்தல் & காதல் காவியம் சார்ந்த மெழுகுவர்த்தி ஒளியுடன் கூடிய இரவு உணவு. புலூமாதே குடும்ப வாழ்வு பணிக்குழு தம்பதிகளுக்காக ஏற்பாடு செய்யப்படும் முதல் சுற்றுலா. **தொடர்புக்கு**: தோமஸ் சாந்த குமார் (016-5260218)/ ஞானமுத்து (016-5608827).

**11. வடக்கு திசை அதிச-வின் காலை சிற்றுண்டி:** வடக்கு திசை அதிச 24 ஜூன் & 1 ஜூலை 2018 (ஞாயிறு) காலை 7.00 & 9.00 மணி திருப்பலிகளுக்கு பிறகு விற்பனை செய்யவுள்ளனர். கிடைக்கக்கூடிய பணம் அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதிக்கு சேரும். மதிய உணவு பொட்டலங்களாகவும் விற்கப்படும். தயவு செய்து உங்களது ஆதரவை தாருங்கள்.

**12. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டட நிதி மே 2018 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **398,052.21** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **434,644.67** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

---

**17/06/18 திருப்பலி வசூல்கள்: காலை** 7.00 - RM 1,079.15 **காலை** 9.00 - RM 1,277.95 **மொத்தம்** - RM 2,357.10
2018 - RM 480.00

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம் என்று ஆங்கிலத்தில் எழுதவும்